**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி - 5**

கோ.எண்:42-46/வருவாய்/உ.ந/2022-2023 ஜவகர் நகர், தேதி: - 8 JUN 2022

**கோரிமேடு கழிப்பிடக் கட்டணம் வசூல் செய்வதற்கான மின்னனு இணையதள ஏல அறிவிப்பு**

உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டபகுதியில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிப்பவர்களிடம் நகராட்சி சார்பில் ஓராண்டு காலத்திற்கு கழிப்பிடக்கட்டணம் வசூலிப்பதற்கான உரிமம் பெற மின்னனு ஏலமுறையில் **(https://eauction.gov.in)** என்ற இணையதளம் மூலம் **29-06-2022 (புதன்கிழமை)** அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை ஏலம் நடைபெறவுள்ளது. மேலும் ஏலம் தொடர்பான விண்ணப்பப்படிவம் மற்றும் ஏல நிபந்தனைகள் மேற்சொன்ன இணையதளம் மற்றும் உழவர்கரை நகராட்சி இணையதளமான **(www.oulmun.in)-**லும் பெற்றுக்கொள்ளலாம்.

| **கழிப்பிடக்கட்டணம் மின்னனு ஏலவிபரம்** | | | |
|---|---|---|---|
| **வரிசை எண்** | **கட்டணக்கழிப்பிடம் அமைவிடம்** | **குறைந்தபட்ச ஏலத்தொகை ஒரு வருட காலத்திற்கு** | **செலுத்தப்படவேண்டிய முன்வைப்பு தொகை** |
| 1 | கோரிமேடு ஜிப்மர் மருத்துவமனை எதிரில் உள்ள நவீன கழிப்பிடம் | ரூ.5,50,000/- | ரூ.55,000/- |

2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை **27-06-2022 (திங்கட்கிழமை)** மாலை 5.00 மணிக்குள் இந்நகராட்சியின் டெண்டர் பெட்டியில் சமர்ப்பிப்படவேண்டும்.

(A. சுரேஷ்ராஜ்)
ஆணையர்

**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி - 5**

கோ.எண்:42-46/வருவாய்/உ.ந/2022-2023 ஜவகர் நகர், தேதி: - 8 JUN 2022

**கோரிமேடு கழிப்பிடக் கட்டணம் வசூல் செய்வதற்கான மின்னனு ஏலம் கோருவதற்கான நிபந்தனைகள்**

உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டபகுதியில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிப்பவர்களிடம் நகராட்சி சார்பில் ஓராண்டு காலத்திற்கு கழிப்பிடக்கட்டணம் வசூலிப்பதற்கான உரிமம் வழங்குவதற்காக வருகின்ற **29-06-2022 (புதன்கிழமை)** அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி அல்லது ஏலக்கேள்வி தொடரும்வரை **(https://eauction.gov.in)** என்ற இணையதளம் மூலம் மின்னனு ஏலம் நடைபெறவுள்ளது.

| **கழிப்பிடக்கட்டணம் மின்னனு ஏலவிபரம்** | | | |
|---|---|---|---|
| **வரிசை எண்** | **கட்டணக்கழிப்பிடம் அமைவிடம்** | **குறைந்தபட்ச ஏலத்தொகை ஒரு வருட காலத்திற்கு** | **செலுத்தப்படவேண்டிய முன்வைப்பு தொகை** |
| 1 | கோரிமேடு ஜிப்மர் மருத்துவமனை எதிரில் உள்ள நவீன கழிப்பிடம் | ரூ.5,50,000/- | ரூ.55,000/- |

2. ஏலத்தில் கலந்துக்கொள்ள விருப்பமுடையவர்கள் விண்ணப்பப்படிவ கட்டணம் தொகையான ரூ.525/- (Rs.500 + GST 5%) மற்றும் செலுத்தப்படவேண்டிய முன்வைப்பு தொகை ரூ.55,000/- ஆகிய இரண்டுக்கும் தனித்தனியாக தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் "ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி" (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்ற பெயரில் கேட்பு வரைவோலை (DEMAND DRAFT) பெறவேண்டும். அதற்குண்டான விண்ணப்பப்படிவத்தை (www.oulmun.in மற்றும் https://eauction.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் (download) செய்துக்கொள்ளலாம்.

3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 27-06-2022 (திங்கள்கிழமை) மாலை 5 மணிக்குள் https://eauction.gov.in என்ற இணையதளம் மூலம் அனைத்து ஆவணங்களையும் அதாவது (விண்ணப்பப்படிவம், விண்ணப்பக்கட்டணம் கேட்பு வரைவோலை, முன்வைப்பு தொகைக்கான கேட்பு வரைவோலை மற்றும் வருமானவரி அடையாள அட்டை நகல்) பதிவேற்றம் (upload) செய்யவேண்டும். பூர்த்தி செய்து கையொப்பமிட்ட விண்ணப்பப்படிவத்துடன மேற்சொன்ன அனைத்து ஆவணங்களையும் இணைத்து 27-06-2022 (திங்கள்கிழமை) மாலை 5.00 மணிக்குள் இந்நகராட்சியின் டெண்டர் பெட்டியில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

4. கட்டாய முன்வைப்புத்தொகையை வரைவோலை விண்ணப்பத்துடன் செலுத்தவேண்டிய கடைசி தேதி **27-06-2022 (திங்கட்கிழமை)** மாலை 5.00

மணிவரை. இந்த காலக்கெடுவிற்கு முன்னதாக முன்வைப்புத்தொகை செலுத்துபவர் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள தகுதியானவர்.

5. மூன்று நாட்களுக்கு பிறகு ஏலத்தில் வெற்றிபெறாதவர்களின் முன்வைப்பு தொகையை திருப்பித்தரப்படும். ஏலத்தில் வெற்றிபெறுபவர்கள் அவர்கள் செலுத்த வேண்டிய முழு தொகையில் வைப்புத்தொகையை சரிசெய்து மீத தொகையை வங்கி வரைவோலையாக செலுத்தவேண்டும்.

6. வெற்றிபெற்ற ஏலதாரர் (L.1) ஏலத்தொகை முழுவதையும் மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத் தவறும்பட்சத்தில் அவருடைய முன்வைப்பு தொகைக்கான வரைவோலையை இழக்க நேரிடும். மேலும், அவருக்கு அடுத்தபடியாக அதிக தொகை கேட்டிருந்த ஏலதாரருக்கு (L.2) தகவல் கொடுக்கப்பட்டு அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். தகவல் கொடுக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அந்த ஏலதாரர் (L.2) முழுத்தொகையும் செலுத்த கடமைப்பட்டுள்ளார். அதுவரை அவரது முன்வைப்பு தொகை திருப்பித்தர இயலாது.

7. ஒவ்வொரு ஏல அதிகரிப்பும் ரூ.1000/- மற்றும் அதற்கு மேற்பட்ட மடங்குகளில் இருக்கவேண்டும். அதிகபட்ச சதவீதம் தற்போதைய ஏலத்தொகையில் 90% மிகாமல் இருக்கவேண்டும்.

8. ஏலம் எடுத்தவர் கீழ்குத்தகைக்கு விடக்கூடாது மற்றும் ரசீது புத்தகத்தில் உழவர்கரை நகராட்சியால் முத்திரையிட்ட ரசீது மட்டுமே கொடுக்கவேண்டும்.

9. மின்னனு ஏலத்தில் கலந்துகொள்பவர்கள் வருமானவரி அடையாள அட்டை (PAN Card) நகல் இத்துடன் இணைக்கப்படவேண்டும்.

10. ஏலத்தில் வெற்றி பெற்றவர் சிறுநீர் கழிக்க நபர் ஒன்றுக்கு ரூ.5/- (ரூபாய் ஐந்து மட்டும்) மலம் கழிக்க நபர் ஒன்றுக்கு ரூ.5/- மற்றும் குளியலுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.10/- (ரூபாய் பத்து மட்டும்) மட்டுமே கட்டணமாக வசூல் செய்யவேண்டும்.

11. ஏல சம்மந்தமான இதர விபரங்கள் அறிய விரும்புவோர் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலக வருவாய் பிரிவில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் அதிகாரியை நேரில் சந்தித்து அறிந்துக்கொள்ளலாம்.

12. ஏலத்தில் வெற்றிபெற்ற நபர் ஏலம் ஊர்ஜிதமான மூன்று நாட்களுக்குள் உரிமக்காலம் முழுவதற்கான உரிமத்தொகையையும் மேலும், ஒருமாத காலத்திற்குரிய ஏலத்தொகைக்கு சமமான அளவில் காப்புத்தொகையினையும் செலுத்துதல் வேண்டும். அப்படி செலுத்தாவிடில் ஏலஉரிமம் ரத்து செய்யப்படும்.

13. ஏலத்தொகையை செலுத்திய தேதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு கழிப்பிடக்கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் வழங்கப்படும்.

14. ஏலத்தை ஏற்றுக்கொள்ளவோ, ரத்து செய்யவோ அல்லது ஏலத்தில் மாற்றம் செய்யவோ நகராட்சி ஆணையருக்கு முழு உரிமை உண்டு.

**(A. சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**

**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி – 5**

கோ.எண்:42-46/வருவாய்/உ.ந/2022-2023 ஜவகர் நகர், தேதி:

**கோரிமேடு கழிப்பிடக் கட்டணம் வசூலிக்க மின்னனு ஏலம் கோருவதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :

2. தந்தை/கணவர் பெயர் :

3. முகவரி :

4. கைப்பேசி எண் :

5. நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஏலத்தொகை : **ரூ.5,50,000/-**

6. முன்வைப்பு தொகையின் விபரம் : **ரூ.55,000/-**
   வங்கியின் பெயர் :

   வரைவோலை எண் :

   வரைவோலை தேதி :

உரிமம் பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனை விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் படித்து தெரிந்து கொண்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கிறேன்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

இடம் :

தேதி :

விண்ணப்பப்படிவத்தின் விலை : ரூ.525/-(500+5%GST)

வங்கியின் பெயர் :

வரைவோலை எண் :

வரைவோலை தேதி :